**ஏப்ரல் – 29**

# TNPSC துளிகள்

- தென் கொரியாவின் LG நிறுவனமானது தனது கைபேசி வணிகத்தை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.
  - இந்நிறுவனத்தின் கைபேசி தயாரிப்புப் பிரிவு கடந்த ஆறு ஆண்டுகளாக இழப்பையே கண்டு வந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் 116 மாவட்டங்களில் மலேரியா அற்ற நிலை உள்ளதாக மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் சமீபத்தில் தெரிவித்துள்ளார்.
  - 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் மலேரியா நோய் பாதிப்பு 84.5% குறைந்துள்ளது. மேலும் இந்தியாவானது மலேரியா நோய்ப் பாதிப்பினால் ஏற்படும் உயிரிழப்புகளை 83.6% என்ற அளவிற்குக் குறைத்துள்ளது.
- இந்திய-சீன எல்லையிலுள்ள சமோலி மாவட்டத்தில் உள்ள நிதி என்ற பள்ளத்தாக்கின் சும்னா பனிப்பாறையில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.
  - இந்தியா, சீனா, நேபாளம் மற்றும் பூடான் ஆகிய நாடுகளிலுள்ள பனிப்பாறைகள், 2000 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் அதன் செங்குத்து உயரத்திற்கு இணையான அளவு மற்றும் தனது பனியளவில் பாதியளவு பனியினை இழந்து வருகின்றன.
- பசிபிக் தீவுகளில் வாழ்பவர்கள் மற்றும் ஆசிய அமெரிக்கர்கள் ஆகியோருக்கு எதிராக இழைக்கப் படும் வெறுப்பு சார்ந்த குற்றங்களின் அதிகரிப்பைத் தடுப்பதற்காக வேண்டி சமீபத்தில் அமெரிக்காவின் கீழவை ஒரு மசோதாவை நிறைவேற்றி உள்ளது.
  - அமெரிக்காவின் அனைத்து மாகாண அரசுகளிலும், கலிபோர்னியாவில் தான் அதிகம் வெறுப்பு சார்ந்த குற்றங்கள் (Hate Rimes) இழைக்கப்படுகின்றன.
- தென் ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய கடன் வழங்கும் நிறுவனமான ஃபர்ஸ்ட்ரேண்ட் வங்கி (FirstRand Bank) 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் இருந்து வெளியேறி உள்ளது.
  - சிட்டிகுரூப் வங்கியினை அடுத்து இந்தியாவை விட்டு வெளியேறிய இரண்டாவது உலகளாவிய வங்கி ஃபர்ஸ்ட்ரேண்ட் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## உலகளாவிய ஆற்றல் ஆய்வு அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமையானது (International Energy Agency – IEA) சமீபத்தில் உலகளாவிய ஆற்றல் ஆய்வு அறிக்கையினை வெளியிட்டது.


***இந்தியாவில்***


- 2019 ஆம் ஆண்டில் பதிவானதை விட இந்த ஆண்டில் கார்பன் டை ஆக்சைடு வெளியீடு 1.4% அதிகமாக உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- புதுப்பிக்கக் கூடிய ஆற்றலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆற்றலின் அதிகரிப்பினை விட நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆற்றல் மூன்று மடங்கு அதிகரிக்கப் பட இருக்கின்றது.

- நிலக்கரியின் தேவையானது 9% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பாரீஸ் உடன்படிக்கையின் கீழ் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவில் கார்பன் வெளியீட்டின் தீவிரத்தை 33% என்ற அளவிலிருந்து 35% வரை குறைப்பதற்கு இந்தியா உறுதி மேற்கொண்டுள்ளது.
- தற்போது, இந்தியாவின் கார்பன் டை ஆக்சைடின் வெளியீடு உலகளாவியச் சராசரியை விட 60% என்ற அளவிற்குக் குறைவாகவே உள்ளது.

## இரட்டை மாறுபாடு வடிவ திரிபினை சமநிலைப் படுத்தும் கோவாக்சின்

- கோவாக்சின் தடுப்பூசியானது கோவிட்-19 தொற்றின் இரட்டை மாறுபாடு வடிவ (Double Mutant Strain) திரிபினை சமநிலைப் படுத்துவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) தெரிவித்துள்ளது.
- பிரேசில் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடுகளின் கோவிட்-19 மாற்றுருகளுக்கு (Variant) எதிராக கோவாக்சின் தடுப்பூசியின் சமநிலையாக்கும் திறனை தேசிய நச்சுயிரியல் மையம் (National Institute of Virology – NIV) சமீபத்தில் நிருபித்துக் காட்டி உள்ளது.
- B.1.617 என்பது சமீபத்தில் பரவி வரும் கோவிட்-19 வைரசின் ஒரு இரட்டை மாறுபாடு வடிவ திரிபு ஆகும்.
- இது E484Q மற்றும் L452R போன்ற மாறுபாடுகளையும் கொண்டுள்ளது.



## இரட்டை மாறுபாடு வடிவத்திற்கு எதிரான பாதுகாப்பு - கோவிசீல்ட்

- B.1.617 என்ற தன்மை மாறிய நச்சுயிரிக்கு எதிராக கோவிசீல்ட் தடுப்பு மருந்து பாதுகாப்பு அளிப்பதாக செல் மற்றும் மூலக்கூறு உயிரியியல் மையமானது (CCMB - Centre for Cellular and Molecular Biology) சமீபத்தில் தெரிவித்துள்ளது.
- இது இரட்டை மாறுபாடு வடிவ திரிபு எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்தத் தடுப்பூசிகள் ஆய்வுக் கூடத்தில் (கண்ணாடிக் குடுவையில்) மேற்கொள்ளப்படும் நடுநிலையாக்கும் தன்மை மதிப்பீட்டினைப் பயன்படுத்தி (Vitro neuralisation assay) இந்த இரட்டை மாறுபாடு வடிவத் திரிபிற்கு எதிராக பரிசோதிக்கப் பட்டன.
- ஆய்வுக்கூட நடுநிலையாக்கும் தன்மை என்ற ஒரு மதிப்பீட்டு முறையானது நச்சுயிரியின் நகலெடுப்பினைத் தடுக்கும் திறனை நோயெதிர்ப்புப் பொருள் கொண்டுள்ளதா என கண்டறியப் பயன்படுத்தப்படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆஸ்திரேலியா மற்றும் சீனாவின் பட்டை மற்றும் சாலை ஒப்பந்தம்

- தேச நன்மைக்காக பட்டை மற்றும் சாலை முன்னெடுப்பின் ஒப்பந்தங்களை ரத்து செய்வதாக ஆஸ்திரேலிய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் விக்டோரிய மாகாண அரசு சீனாவுடன் இரண்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டது.
- அந்த மாகாணத்தில் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அந்த மாகாணத்தில் சீன முதலீடுகளை கொண்டு வரும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் இரண்டாவது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த இரு ஒப்பந்தங்களும் சீனாவின் பட்டை மற்றும் சாலை எனும் முன்னெடுப்பின் கீழ் மேற்கொள்ளப் பட்டன.
- சமீபத்தில் இந்த இரு ஒப்பந்தங்களையும் ஆஸ்திரேலிய அரசு ரத்து செய்துள்ளது.

*குறிப்பு*

- 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் ஆஸ்திரேலிய அரசு, ஆஸ்திரேலிய வெளிநாட்டு உறவுகள் (மாகாணம் மற்றும் ஒன்றியச் சீரமைப்பு) சட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- வெளிநாடுகள் மற்றும் மாகாண அரசுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்தையும் ரத்து செய்தவற்கு ஆஸ்திரேலிய அரசிற்கு இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது.
- ஒப்பந்தங்களால் தேச நன்மை பாதிக்கப்படும் எனும் நிலை வரும் போது அந்த நாட்டு அரசு இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

## எத்தியோப்பியாவில் அவசர நிலை

- சமீபத்தில் தனது நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வன்முறைகள் வெடித்ததையடுத்து அம்ஹாரா பகுதியின் தென்பகுதிகளில் அவசர நிலையை எத்தியோபியா அறிவித்து உள்ளது.

- ஒரோமோ பழங்குடியினத் தலைவர் ஒரு பள்ளிவாசலுக்கு வெளியே சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் வன்முறை வெடித்துள்ளது.
- இதனால் ஒரோமோ இன மக்களுக்கும் அம்ஹாரா பகுதியின் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் அதிகரித்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஏஸ் மணி நியோ வங்கி

- ஏஸ்வேர் பின்டெக் சர்வீசஸ் (fintech services company) எனப்படும் நிதித் தொழில்நுட்ப சேவை நிறுவனம் ஏஸ் மணி நியோ வங்கி (Ace Money Neobank) எனப்படும் கேரளாவின் முதல் நியோ வங்கியை தொடங்கியுள்ளது.
- இதற்காக அந்நிறுவனம் YES வங்கி மற்றும் ICICI வங்கியுடன் இணைந்திருக்கின்றது.
- ஏஸ்வேர் என்பது கேரளாவினை மையமாகக் கொண்ட எனப்படும் ஒரு நிதித் தொழில்நுட்ப சேவை நிறுவனம் ஆகும்
- ஏஸ் மணி வங்கியின் சேவைகள் கேரளாவின் அனைத்துப் பஞ்சாயத்துகளிலும் வழங்கப் படும்.

### *நியோ வங்கிகள்*

- இவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைந்திருக்கும் வழக்கமான வங்கிகளை போல் அல்லாது முழுவதுமாக இணையவழியில் செயல்படும் ஒரு வகையான டிஜிட்டல் வங்கியாகும்.
- Chqbook (Chqbook.com) என்பது மளிகைக் கடைகள், வணிகர்கள், வேதியியலாளர்கள் மற்றும் மற்ற உரிமையாளர்கள் போன்ற சிறிய வணிக உரிமையாளர்களுக்கான இந்தியாவின் முதல் நியோ வங்கியாகும்.
- Fampay என்பது பதின்ம வயதினருக்கான இந்தியாவின் முதல் நியோ வங்கியாகும்.
- Finin என்பது நுகர்வோருக்காக முழு அளவில் இயங்கும் இந்தியாவின் முதல் நியோ வங்கியாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இரண்டாவது உலகப் பெருங்கடல் மதிப்பீட்டு அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சமீபத்தில் இரண்டாவது உலகப் பெருங்கடல் மதிப்பீட்டு அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது உலகம் முழுவதிலிருந்தும் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகளால் நியமிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான அறிவியலாளர்களின் உழைப்பாகும்.
- இந்த அறிக்கை 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முதல் உலகப் பெருங்கடல் மதிப்பீட்டு அறிக்கையின் தொடர்ச்சி ஆகும்.

### *முக்கிய தகவல்கள்*

- இதன் படி பெருங்கடல்களில் உயிரற்ற பகுதிகளின் (Dead Zone) எண்ணிக்கை இரட்டிப்பாகி உள்ளன.
- 2008 ஆம் ஆண்டில் 400 ஆக இருந்த உயிரற்ற பகுதிகளின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 700 ஆக அதிகரித்துள்ளது.

- 90% சதுப்புநிலக் கடல்புற்கள் மற்றும் ஈரநிலத்தின் தாவர இனங்கள் பெரும் அழிவினை எதிர்நோக்கியுள்ளன.
- 30% கடல்பறவை இனங்கள் அழிவின் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.
- 10% பெருங்கடல் மட்டுமே ஆராயப் பட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.
- 1990 ஆம் ஆண்டிலிருந்து பெருங்கடல்களில் நிலவும் வெப்பத்தின் அளவு இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகமாகியுள்ளது.
- 15% மணல் நிறைந்த கடற்கரைகள் பின்னடைவினை எதிர்நோக்கியுள்ளன.

*உயிரற்ற பகுதி*

- ஒரு உயிரற்ற பகுதி என்பது ஆக்சிஜன் குறைபாட்டினை (ஹைபாக்சியா) குறிக்கும் ஒரு சொல்லாகும்.
- மிகப்பெரிய உயிரற்ற பகுதி அரபிக்கடலில் அமைந்துள்ளது
- இது ஓமன் வளைகுடாவில் கிட்டத்தட்ட 63,700 சதுர மைல்களை உள்ளடக்கியது போலாகும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு நாள் – ஏப்ரல் 26


- 1996 ஆம் ஆண்டு செர்னோபில் பேரிடரின் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினம் பொதுவாக அணு ஆற்றலின் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வினையும் ஏற்படுத்துகிறது.
- 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று ஐக்கிய நாடுகள் இந்த நினைவு நாளினை அறிவித்தது.
- 1986 ஆம் ஆண்டில் இதே நாளில்தான் உக்ரைனில் உள்ள செர்னோபில் அணுசக்தி மையத்திலுள்ள அணு உலை ஒரு பேரழிவினை உண்டாக்கும் வகையில் வெடித்தது.




## உலக அறிவுசார் சொத்து தினம் – ஏப்ரல் 26

- தினசரி வாழ்வில் காப்புரிமை, வர்த்தகக் குறியீடு மற்றும் தொழிற் வடிவமைப்பு (Patents. Trademark and designs) போன்றவை ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் படைப்பாற்றலைக் கொண்டாடுவதற்கும் இத்தினம் கடைபிடிக்கப் படுகிறது.

- இத்தினத்தின் இந்த ஆண்டிற்கான கருத்துரு, "அறிவுசார் சொத்து மற்றும் சிறு & நடுத்தர நிறுவனங்கள் : உங்கள் கருத்துகளை சந்தைப் படுத்துங்கள்" (IP and SMES : Take Your Ideas to Markets) என்பதாகும்.
- பொருளாதாரத்தில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்கினை மேம்படுத்தவும் அறிவுசார் சொத்துரிமைகளைப் பயன்படுத்தி ஒரு வலுவான போட்டித் தன்மை மிகுந்த ஒரு வணிகமாக எவ்வாறு அதனை மாற்றலாம் என்பதனை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★